18.10.2024

OS.No.203/2024

PW2– முத்துராஜ், த/பெ.வீரபத்திரன்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 18.10.2024.

குறுக்கு விசாரணை : ( பிரதிவாதி தரப்பில்)

1. வழக்கு தபசில் சொத்து ஆழ்வார்குறிச்சி பகுதி–1ல் உள்ளது என்றால் சரிதான்.

2. தபசில் சொத்தின் சர்வே எண்.196 மற்றும் 197 ஆகும். தபசில் சொத்தின் விஸ்தீரணங்கள் எனக்கு தெரியாது.

3. தபசில் சொத்தின் சர்வே எண்.196/1ல் மேற்குபக்கம் தங்கவேல் மகன் குமார் இடம் உள்ளது என்றால் சரிதான். தென்பக்கம் அழகையா மகன் குமார் இடம் உள்ளது என்றால் சரிதான்.

4. சர்வே எண்.197க்கு கீழ்பக்கம் பாண்டி இடம் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.197க்கு தெற்குபக்கம் அழகையா மகன் சௌந்தரராஜ் இடம் உள்ளது என்றால் சரிதான்.

5. எனது சகோதரர் தங்கவேல், முத்துராஜ்–யிடம் இருந்து சர்வே எண்.1301யை ஆழ்வார்குறிச்சி பகுதி–2யை பொறுத்து கிரையம் வாங்கினார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

6. முத்துராஜ் கொடுத்த கிரையத்தை பொறுத்து இவ்வழக்கின் பிரதிவாதி பூசக்கனி, என் அண்ணன் தங்கராஜ் மீது, சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். சார்பு நீதிமன்ற வழக்கின் தொடர்ச்சியாக எங்கள் அனுபவத்தை இடைஞ்சல் செய்வதாக கூறி ஆழ்வார்குறிச்சி காவல்நிலையத்தில் நானும், இந்த வழக்கின் 5ம் வாதி ராஜனும் புகார்கொடுத்தோம் என்றால் சரிதான்.

7. என்னிடம் காண்பிக்கப்படுவது என் மீதும்,ராஜன் மீதும் பிரதிவாதி பூசக்கனி ஆழ்வார்குறிச்சி காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுவிற்கு மனு ரசீது என்றால் சரிதான். **புகார் மனு ஏற்பு ரசீது பி.வா.சா.ஆ.2 ஆக வா.சா.2 குறுக்குவிசாரணையில் குறியீடு செய்யப்படுகிறது.**

8. தபசில் சொத்தை பொறுத்து 17.09.1992ல் பாத்திமாபீவி எழுதிகொடுத்த கியைரப்பத்திரத்தை நேரடியாக பார்த்தீர்களா என்றால் இல்லை. வாதி சொல்லி தெரிந்துகொண்டேன். மேற்படி பாத்திமாபீவி யாரிடடம் கியைரம் வாங்கினார் என எனக்கு தெரியாது.

9. அணைக்கரை முத்துவின் முதல் மனைவி சுப்பம்மாளா என்றால் எனக்கு தெரியாது. 2வது மனைவி பெயர் தான் நேசமணி என தெரியும்.

10. அணைக்கரை முத்துவின் முதல்மனைவியின் மகன்தான் பட்சியா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. ஆனால் அந்த பட்சி இறந்துவிட்டார்.

11. பட்சிக்கு ஒருமனைவியும், 2 பிள்ளைகளும் இருக்கிறார்களா என்றால் எனக்கு அது தெரியாது.

12. இன்று ராஜன் என்னுடன் சாட்சியம் செல்ல வந்துள்ளார்.

13. என் முதல்விசாரணை வாக்குமூலமானது நேசமணி சொல்லி தயார் செய்யப்பட்டது.

14. என் முதல்விசாரணை வாக்குமூலத்தை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன். என் முதல்விசாரணை வாக்குமூலத்தில் என்ன உள்ளது எனக்கு தெரியாது என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

15. நேசமணி மட்டும் இந்த வழக்கில் பாகம் கோரி தாக்கல் செய்துள்ளார்.

16. எத்தனை அயிட்ட சொத்துக்களுக்கு பாகம் கோரியுள்ளார் என்ற விவரம் தெரியாது.

17. தபசில் சொத்துக்களை வாதி அனுபவம் செய்து வருவதற்கான ஆவணம் எதையும் நான் பார்க்கவில்லை.

18. தபசில் சொத்து அறங்கநாத கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்றால் இல்லை. தபசில் சொத்தை பொறுத்து, வாதி , பாத்திமாபீவியிடம்

கிரையம் பெற்றது செல்லாது என்றும், வழக்கு சொத்தானது கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்றும், வழக்கு சொத்து வாதியின் அனுபவத்தில் உள்ளது என்றாலும் சரியல்ல.

19. என் மீது, பிரதிவாதி ஆழ்வார்குறிச்சி காவல்நிலையத்தில் புகார்கொடுத்ததால் நான் வஞ்சகமாக பிரதிவாதிக்கு எதிராக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

20. எனக்கும், பிரதிவாதிக்கும் பேச்சுவார்த்தை கிடையாது என்றால் சரிதான். வழக்கின் விவரம் தெரியாமல் நான் சாட்சியம் அளிப்பதால் என் சாட்சி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ஒம்/–J.ராஜேஷ்குமார்,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
தென்காசி.